**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 27-02-2024**

**விருதுநகர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-02-27 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-02-28 | 2024-02-29 | 2024-03-01 | 2024-03-02 | 2024-03-03 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 35.0 | 36.0 | 36.0 | 36.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 25.0 | 24.0 | 25.0 | 25.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 80 | 90 | 80 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 20 | 20 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12 | 14 | 14 | 10 | 10 |
| காற்றின் திசை (கோணம்) | 50 | 50 | 50 | 70 | 70 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 3 | 2 | 2 |

**வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:**

வரும் நாட்களில், மிக லேசானமுதல் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை இல்லை என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°C முதல் 36°C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24°C முதல் 26°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 முதல் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 20 முதல் 30 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. அடுத்த 24 மணிநேரம், காற்றின் வேகம் மணிக்கு 10 முதல் 14 கி.மீ வரை இருக்கும் என்றும் காற்றின் திசை வடகிழக்கு இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**பொது ஆலோசனை:**

| |
|---|
| எதிர்வரும் நாட்களில் வறண்ட வானிலையே காணப்படும். எனவே, விவசாயிகள் பயிர்களின் தேவை மற்றும் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். |

**குறுஞ்செய்தி :**

| |
|---|
| மழை இல்லை. விவசாயிகள் பயிர் தேவையின் அடிப்படையில் நீர்ப்பாசனத்தை திட்டமிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். |

**தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:**

| **தோட்டக்கலை** | **தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை** |
|---|---|
| மல்லி கை | மொட்டுப்புழு: இப்புழுவானது மொட்டுக்களை துளையிட்டு மொட்டுக்களின் உட்பகுதியை உண்கின்றன. பாதிக்கப்பட்ட மொட்டுக்களில் துளைகள் காணப்படும். இத்துளைகளின் மீது புழுவின் எச்சம் காணப்படும். பாதிக்கப்பட்ட மொட்டுக்களானது உதிர்ந்து விடுகின்றன. மேலும், இவை பூ மொட்டுக்களை மெல்லிய நூல் இழை கொண்டு பிணைந்துக் கொள்கின்றன. ஒரு புழுவானது 2 முதல் 3 பூக்களை தாக்குகின்றன. இவற்றின் சேதமானது அதிகமாக இருந்தால் பூ மகசூலானது 50 சதம் வரை குறைய வாய்ப்புள்ளது. தாய் அந்தப் பூச்சியானது வெண்ணிற முட்டைகளை விரியாத பூ மொட்டுக்களின் மீது தனித்தனியாக இட்டுச் செல்கின்றன. முட்டையிலிருந்து 3 முதல் 4 நாட்களில் வெளிவரும் புழுவானது வெளிறிய மஞ்சள் அல்லது பச்சை நிறத்தில் கருப்பு நிறுத்த தலையுடன் காணப்படும். பொதுவாக இவை மண்ணிற்குள் சென்று கூட்டுப்புழுவாக மாறும். சில சமயங்களில் இலைகளின் உள்ளே கூட்டுப் புழுவாக மாறுகின்றன. அந்துப்பூச்சியானது வெண்மை நிறத்தில் காணப்படும். அவற்றின் இறக்கையில் வளைவான கோடுகள் காணப்படும். 1. பாதிக்கப்பட்ட இலைகள் மற்றும் மொட்டுக்களை புழுக்களுடன் சேகரித்து அழிக்க வேண்டும். 2. சரியான சமயத்தில் தேவையில்லாத இலைகள் மற்றும் கிளைகளை அகற்றி தோட்டத்தை சுத்தமாக பராமரிக்க வேண்டும்.3.தாவரப் பூச்சிக் கொல்லியான வேப்பங்கோட்டை சாறு 5 சத கரைசலை தெளித்து இப்பூச்சியினைக் கட்டுப்படுத்தலாம். |

**உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:**

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | ஆட்டுஅம்மை நோய்: 1. இந்நோய் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெயில் காலங்களில் ஒருவகை நச்சுயிரியினால் ஏற்படும். 2. பாலூட்டும் ஆடுகளையும், கிடாக்களையும் அதிகமாக இந்நோய் தாக்கும். 3. பாதிக்கப்பட்ட ஆடுகளிலிருந்து நேரடித் தொடர்பின் மூலமாகவும் மாசுப்பட்ட தீவனம் மற்றும் தண்ணீர் மூலம் இந்நோய் பரவுகிறது. அறிகுறிகள்: அதிக காய்ச்சல்,சோர்வு இதனை தொடர்ந்து உடலில் ரோமங்களற்ற பகுதிகளில் குறிப்பாக உதடுகள், மூக்கு, வாயின் உட்சவ்வு, கண்கள், பால்மடி, தொடைப்பகுதி, வாலின் அடிப்பகுதி போன்ற இடங்களில் அம்மை கொப்புளங்கள் உருவாகும். தடுப்புமுறை: முதல் தடுப்பூசி 3 மாத வயதிலும் பின்னர் வருடந்தோறும் பிப்ரவரி -மார்ச் மாதங்களில் தடுப்பூசி செலுத்தவேண்டும். சிகிக்சை: 1. நோயுற்ற ஆடுகளை தனியே பிரித்து சிகிக்சையளிக்க வேண்டும். 2. புண்களில் போரிக் பவுடர் மற்றும் கிளிசரின் கலந்த கலவையை மருந்தாக பூசவேண்டும். 3. 3 முதல் 5 நாட்களுக்கு நோய் எதிர் உயிரி மருந்து சிகிக்சையளிக்கவேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சிக்கன் | கோழிப்பண்ணையாளர்களுக்கான கோடைக்கால பராமரிப்பு உத்திகள்: 1. கோழிகளுக்கிடையே இடநெருக்கடியை தவிர்க்கவேண்டும். 2. கோழிகளுக்கு வெப்பம் குறைந்த காலை/மாலை நேரங்களில் தீவனமளிக்க வேண்டும். தீவனத்தில் நீர் தெளித்து வைக்கலாம். 3. வைட்டமின் சி மற்றும் பி -காம்ப்ளக்ஸ் மருந்துகளை தண்ணீருடன் கலந்து வைக்கவேண்டும். 4. தண்ணீர் தொட்டிகளை ஈரமான சாக்குபைகளை கொண்டு மூடிவைக்கவேண்டும்.5.தண்ணீர் அளிக்கும் அளவை அதிகரிக்கவேண்டும். குறைந்தகால இடைவெளியில் தண்ணீர் அளிக்கவேண்டும். 6. கொட்டகையின் கூரை மீது நீரை தெளிப்பதன் மூலம் கொட்டகையின் உள் வெப்பத்தை குறைக்கலாம். 7. கொட்டகையின் பக்கவாட்டில் ஈரமான/ நனைந்த சாக்கினை தொங்கவிடுவதன் மூலம் உள் வெப்பத்தை குறைக்கலாம். |